பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*13 03 2025 7 15*
*வியாழக்கிழமை காலை*

*தலைப்புச் செய்திகள் -*

1. பிரதமர் திரு நரேந்திரமோடியின் மொரீஷியஸ் பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
2. நாட்டில் எண்ணெய் வள ஆதாரங்கள் கண்டுபிடிப்புக்கான சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.
3. பேரிடர் உள்ளிட்ட பல்வேறு தருணங்களில் அண்டை நாடுகளுக்கு உதவி வருவதில் முன்னோடியாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.
4. பாகிஸ்தானில் கிளர்ச்சியாளர்களால் சிறை பிடிக்கப்பட்டிருந்த ரயில் பயணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.
5. ஆஸ்திரேலியா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடியின் இரண்டு நாள் மொரீஷியஸ் இரண்டு நாள் பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மொரீஷியஸ் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் நேற்று இரவு புதுதில்லி திரும்பியதை அடுத்து பிரதமர் அலுவலகம் சமூக வலைதளத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளது..

இந்த பயணத்தின்போது இந்தியா – மொரீஷியஸ் இடையே கடல்சார் பாதுகாப்பு, உள்ளூர் கரன்சிகளில் வர்த்தகத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மொரீஷியஸ் பிரதமர் திரு நவின்சந்திர ராம்கூலத்துடன் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுக்களை பிரதமர் நடத்தினார்.

நேற்று நடைபெற்ற மொரீஷியஸ் நாட்டின் தேசிய தின கொண்டாட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளிலும் திரு நரேந்திரமோடி கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

வெளிநாட்டு செயற்கைக்கோள்களை செலுத்தியதன் மூலம் 143 மில்லியன் அமெரிக்க டாலரும், 272 மில்லியன் யூரோவும் அந்நிய செலாவணி கிடைத்துள்ளதாக மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மூலம் கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை 393 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள் செலுத்தப்பட்டதாகக் கூறினார்.

அத்துடன் வளர்ச்சியடைந்த நாடுகள் உட்பட 34 நாடுகளின் செயற்கைக் கோள்களையும் இந்தியா செலுத்தியதாக திரு ஜிதேந்திரசிங் தெரிவத்தார்.

**[]<<<>>>[]**

நாட்டில் எண்ணெய் வள ஆதாரங்கள் கண்டுபிடிப்புக்கான சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

எண்ணெய் வயல்கள் சட்டம் 1948-ல் திருத்தம் மேற்கொள்வதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மாசோதா குறித்த விவாதத்திற்கு பதிலளித்து பேசிய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்ஜித்சிங் பூரி, எண்ணெய் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் இந்த சட்டத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கான நீண்டகால திட்டம் உள்ளிட்டவை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரேசில், கயானா, சுரிநாம், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எரி பொருட்களின் அளவு அதிகரித்துள்ளதாகவும் திரு ஹர்திப் சிங் பூரி  கூறினார்.

[]<<<>>>[]

நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் நடவடிக்கைகளும் வரும் திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஹோலிப் பண்டிகையையொட்டி அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்படுவதாக அவைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

பேரிடர் உள்ளிட்ட பல்வேறு தருணங்களில் அண்டை நாடுகளுக்கு உதவி வருவதில் முன்னோடியாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தம்மை சந்தித்த மடகாஸ்கர் நாடாளுமன்ற பிரதிநிதிகள் உடனான பேச்சுக்களின்போது அவர் இதனை தெரிவித்தார்.

மடகாஸ்கர் தேசிய நாடாளுமன்ற தலைவர் திரு ஜஸ்டின் **Tokely** -வுடன் உரையாடிய அவர், இந்தியாவின் நம்பிக்கைக்குரிய கூட்டாளியாக மடகாஸ்கர் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

வர்த்தகம், கலாச்சாரம், இரு நாட்டு மக்களுக்கு இடையேயான தொடர்பு ஆகியவற்றை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்வதாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை வலுப்படுத்துவதில் மடகாஸ்கரில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பு குறித்தும் திரு ஓர் பிர்லா எடுத்துரைத்தார்.

[]<<<>>>[]

உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாட்டையொட்டி உலகளாவிய பிரதிநிதிகளுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்சர், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் இன்று உரையாடுகின்றனர்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த சந்திப்பில், தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன், மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

ஊடக மற்றும் பொழுதுப்போக்கு துறையில் உள்ள வாய்ப்புகள் குறித்து நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு தூதர்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

[]<<<>>>[]

விமானப்படைக்காக நவீன ரேடாரை கொள்முதல் செய்வதற்காக காஸியாபாத்தில் உள்ள பாரத் எலெக்ரானிக் நிறுவனத்துடன், பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரேடார், விமானப் படையின் கண்காணிப்பு திறனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஆறு கோடி ரூபாய் மதிப்பிலான இதற்கான ஒப்பந்தம் பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ் குமார் சிங் முன்னிலையில் கையெழுத்தானது.

இது பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் சுயசார்பை அடைவதற்கான மற்றொரு நடவடிக்கை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானில் போலன் மாவட்டத்தில் பலூச் விடுதலை கிளர்ச்சியாளர்களால் சிறை பிடிக்கப்பட்டிருந்த ரயில் பயணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக 346 பிணைக் கைதிகள் மீட்கப்பட்டதகாவும், கிளர்ச்சியாளர்கள் 50 பேர் கொல்லப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக பலுசிஸ்தான் தலைநகர் குவெட்டா நகரிலிருந்து – பெஷாவர் நோக்கி சென்று கொண்டிருந்த பயணியர் ரயிலை நேற்று முன்தினம் கிளர்ச்சியாளர்கள் சிறை பிடித்தனர்.

**[]<<<>>>[]**

சௌதி அரேபியாவின் ஜீத்தாவில் நடைபெற்ற அமெரிக்க பிரதிநிதிகளுடனான பேச்சுக்களுக்குப் பிறகு 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க – உக்ரைன் அதிகாரிகளிடையே நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த முடிவு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக உக்ரைன் மீது விதிக்கப்பட்டிருந்த ராணுவ உதவி மற்றும் புலனாய்வு பகிர்வு தடையை விலக்கிக் கொள்ள அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா – உக்ரைன் இடையே நடைபெற்ற போர் நிறுத்தம் தொடர்பான தகவல்களை ரஷ்யா எதிர்நோக்கி உள்ளதாக அந்நாட்டு செய்தி தொடர்பாளர் திரு திமித்ரி பெஸ்கோ தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஹரியானா மாநகராட்சி தேர்தலில் பிஜேபி பெரும் வெற்றிபெற்றுள்ளது.

மொத்தம் உள்ள பத்து மாநகராட்சியில் ஒன்பது இடங்களை பிஜேபி கைப்பற்றியுள்ளது.

ஒரு மாநகராட்சியில் சுயேச்சை வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார்.

அம்பாலா, குருகிராம், சோனிப்பட், பரிதாபாத், பானிப்பட், ஹிஸார், யமுனா நகர் ஆகிய மாநகராட்சிகளில் பிஜேபி வெற்றிபெற்றது.

**[]<<<>>>[]**

நாட்டில் விதர்பா, ஒடிஸா, குஜராத் ஆகிய பகுதிகளில் இன்று வெப்பநிலை அதிகரித்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சல பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா ஆகிய மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், ஹரியானா, தில்லி, சண்டிகர், உத்தராகண்ட், ஹிமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்த இரண்டு முதல் மூன்று நாட்களுக்கு பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தில் நீலகிரி, ஈரோடு, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இன்று முதல் இரண்டு நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் ஆஸ்திரேலியாவின் ஜோசப் வொய்ட்-ஐ 11-6, 11-2, 11-4 என்ற செட் கணக்கில் வென்றார்.

இரண்டாவது சுற்றில் அவர் ஸ்காட்லாந்தின் **Greg lobban-**ஐ எதிர்கொள்கிறார்.

**[]<<<>>>[]**

ஆல் இங்லாண்ட் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெங்கி ரெட்டி - ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 21-17,

21-15 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் **Lundgaard – vestergaard** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் த்ரிஷா ஜோலி – காயத்ரி கோபிச்சந்த் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை 21-17, 21-13 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு பிரசாந்த் - போலந்தின் சைமன் வாக்கோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-2, 6-2 என்ற சென்ற கணக்கில் நார்வேயின் விக்டர் - லூகாஸ் இணையை வென்றது.

***End of News***